Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 181/2024 PW-9**

Name : திரு.சசிக்குமார்
Father / Husband name : சீனுவாசன்
Village : ஒலக்கூர்
Age : 49
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 06.05.2026

Accused present. Both side counsel present. Witeness identified by Roshanai PS HC 2735 Tr.Palanivel.

**முதல் விசாரணை**

நான் தற்போது ஒலக்கூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்துவருகிறேன். கடந்த 2024 ம் வருடம் நான் ரோசணை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியிலிருந்தபோது உதவி ஆய்வாளர் பதிவு செய்து முதல் கட்ட விசாரணைய செய்த ரோசனை காவல் நிலைய குற்ற எண் 589/2023 u/s 294(b),323,353,506(1) IPC வழக்கினை எனது மேல்விசாரணைக்கு 19.02.2024 அன்று வைத்தார். நான் வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அ.சா.1 பாஸ்கரன் என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் மோனிஷா அவர்களை விசாரித்து காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் அன்றையதினமே வழக்கின் அனைத்து விசாரணையும் முடித்து எதிரியின் மீது u/s 294(b),323,353,506(1) IPC ன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.சா.1 பாஸ்கரன் எங்கள் காவல் நிலையத்தில் பணிபுரிந்த காவலர் என்றால் சரிதான். அ.சா.1 அன்றையதினம் பணியிலிருந்தற்கான பதிவேடு கைப்பற்றி தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அ.சா.1 புகாரில்

சம்பவயிடத்திற்கு இருச்சக்கர வாகனத்தில் சென்றாரா அல்லது நான்கு சக்கர வாகனத்தில் சென்றாரா என்று குறிப்பிட்டு சொன்னாரா என்றால் இல்லை. வாகனத்தின் பதிவு எண்ணை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரியின் பெயரை எப்படி தெரிந்துகொண்டார் என்று புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவயிடத்தில் யார் யார் இருந்தார்கள், எத்தனை நபர் இருந்தார்கள் என்று குறிப்பிட்டு புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். அன்றையதினம் காவல் நிலையத்தில் பாரா பணியிலிருந்த த.கா. தனுசு என்வபவரை இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். எதிரியின் அண்ணனை இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கின் சம்பவயிடம் கொள்ளார் பேருந்து நிறுத்தம் என்று சொல்லப்பட்டுள்ளது, ஆனால் பேருந்து நிறுத்தத்தில் எந்தயிடம் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சொன்ன விதத்தில், சொன்ன சமயத்தில் எதிரி அசா.1 ஐ அடிக்கவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 எதிரியை வேலைக்கு அழைத்து எதிரி வரவில்லை என்பதால் எதிரியின் மீது பொய்யான புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. அ.சா.1 காவலர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யான இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது.**

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.